Kavignan

# கவிஞன்

இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு

முற்றுமுழுதான கவிதைச் சஞ்சிகை



இதழ்-001 * பங்குனிப் பௌர்ணமி 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி ஞன்

Kavignan

# கவி ஞன்

அன்பான, கவிஞன் வாசகர்களுக்கு வணக்கம்,

முதல்க் கவிஞ்ன் உங்கள் கரம் தவழ்கையில் அகம் மகிழ்கின்றான். இது முற்று முழுதாக கவிதைகள் தாங்கி வரும் ஒரு இலக்கியச் சிற்றிதழ்.

இச்சஞ்சிகை கவிதை இரசிகர்களையும் கவிபுனையும் ஆர்வமுள்ளவர்களையும் களிப்புறச்செய்யும் என நம்புகின்றேன்.

அடுத்தடுத்த இதழ் மலர உங்கள் வரவேற்பும் ஆதரவும் கவிஞனுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இலக்கிய நெஞ்சங்களை மகிழ்விக்கும் ஒரு இலாபநோக்கற்ற சஞ்சிகையாகவே தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்பதே எனதவா!

உங்கள் ஆக்கங்களை அனுப்பிவைப்பதன் மூலம் கவிஞனின் உயர்வுக்கு நீங்களும் ஏணியாய் உதவலாம்.


**அனுப்பவேண்டிய முகவரி:**

"கவிஞன்"
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(E.P),
மட்டக்களப்பு,
இலங்கை.

*"KAVIGNAN"*
*Co-op Road,*
*Puthukkudiyiruppu - 5 (E.P),*
*Batticaloa,*
*Sri Lanka.*

**மின்னஞ்சல்:**

kavignan@live.com

**தொலைபேசி இல:**

(0094) 065 3650 153

(0094) 071 53 73 468


அன்புடன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....

☞ அறிமுகப் புதுமுகம்................................ 04
☞ இரவுகள் ஒத்திவைக்கப்படுகின்றது............ 05
☞ இம்மாதப் பிரபலம்.................................. 06
☞ இலக்கணக் கவிஞன் ............................ 07
☞ என்னுயிரே பிரியாதே.......................... 08
☞ காதல் மௌனம்.................................. 10
☞ அட்டைப்படக் கவிதை........................ 11
☞ எங்களையும் பெயரிடுங்கள்.................... 12
☞ மேசைக் கிறுக்கல்................................ 13
☞ நிறைமகள்.......................................... 14
☞ கவிஞனுக்கு வாசகனிடமிருந்து................ 15

**சிந்தனைக்கு...**

உன் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் அனைத்தும் உனக்கு எஜமானன். ஆனால் உன் வாயிலிருந்து புறப்பட இருக்கின்ற எல்லாச் சொற்களுக்கும் நீயே எஜமானன்.

ஒருவன் சொல்லுகின்ற வார்த்தை இன்னொருவருடைய மனதைக் காயப்படுத்துமாயின் அவ்வார்த்தை எப்பொழுதும் அவரது மனச்சாட்சியை உறுத்திக் கொண்டேயிருக்கும். ஆகவே நாம் ஒருவருக்கு எவ்வகையான வார்த்தைகளைப் பிரயோகிப்பதாக இருந்தாலும் ஒருமுறை நிதானித்தே கூறவேண்டும்.ஏனெனில் இனி சொல்லப்போகும் ஒவ்வொரு சொற்களையும் தீர்மானிப்பது எமது உணர்வுகள்தான்.

"நட்பை உருவாக்குவதை விட உருக்குலைத்து விடுவது இலகுவானது"

~ ஜெயராமநாதன் லெதீஸ்ருபன்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகப் புதுமுகம்



**முழுப் பெயர்** : தருமலிங்கம் ரஜிதரன

**முகவரி** : ஊர் வீதி,
ஆரையம்பதி மத்தி,
ஆரையம்பதி - 3,
மட்டக்களப்பு.

**பிறந்த திகதி** : 1985-02-10

**எழுதிய முதல்வரி** :
அன்பின் இருப்பிடம் அளிப்பு
வாளின் இருப்பிடம் அழிப்பு

**பொழுது போக்கு** : கணணி

**வாழ்க்கையைப் பற்றி** :
நேரான எண்ணங்கள், பொறுமை காத்திருப்பு வாழ்க்கையில் எந்த தேடலையும் வெற்றிகொள்ளும்.

**அனுபவம் பற்றி:**
அமைதியான கடல்
சிறந்த மாலுமியை
உருவாக்காது

**கடவுளிடம் வேண்டுவது** :
எனக்கென நினைத்ததை மறந்து எல்லோருக்கும் நன்மைசெய்ய வேண்டும் என வேண்டியதை நிறைவேற்று என்று..



**பாடசாலைப் பருவம்:**
சில சுதந்திரங்கள் இன்றி
பல சுதந்திரத்தோடு
பாதுகாப்பாக கடந்துவிட்டது

**கல்லறைகளுக்கு,**

என் பேனா மையின்
ஈரம் காய்வதில்லை
காரணம் இம் மடலின்
ஒற்றைகள் எங்கும்
கண்ணீர் பதிந்துள்ளது.

உறவுக்காக எழுதிய இக்
கடிதங்கள் ~ என்
சொந்தங்களை சேரும் முன்~ நான்
அவர்களிடம் சேர்ந்து விடுவேனோ!

வானத்தில் நட்சத்திரங்களின்
பெயர்கேட்டேன் ~ நம்
மூதாதையர் என்றாள் என் தாய்
அவள் நிலவின் கறையில்
ஔவை காட்டினாள் ~ அந்
நிலவை ஓவியமாக்கினாள்
இன்று...
நீ எங்கே அம்மா இருக்கிறாய்?

வீட்டுக் கதவுகளை தாண்டி வந்தேன்
விளங்கவில்லை இவ்வுலகம்
தாயின் சேலையில் சோலையாய்
வாழ்ந்தவன் இன்று
திக்கற்று நிற்கின்றேன்

ஒரு கரம் என்னைப் பற்றியது
மூங்கிலை புல்லாங்குழலாக
மாற்றும் வித்தையை
எண், எழுத்தோடு
தாயூட்டிய தமிழோடு
கற்றுவித்தது
ஆனால்...
தந்தையே நீங்கள் எங்கே?

மை பதித்த தடங்கள் ~ பாதி
கண்ணீரில் கரைந்து விட்டது
தாழிட்டுக் கேட்கிறேன்
ஒருமுறையேனும்
பதில் எழுதுங்கள்

இப்படிக்கு
இறந்த இதயங்களுக்காய்
துடிக்கும் இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுகள் ஒத்திவைக்கப்படுகின்றது....

நிலவின் பூரணமும்...
நட்சத்திரங்களின் சிமிட்டலுமாய்
நிறைந்திருந்தது வானம்...

கறுப்பாய் மதி மறைக்கும் மேகம்
எங்கும் தென்படவில்லை...
ஆதலால் மழையில்லை...
கொடியில் உலரப்போட்ட ஆடைகள்
உலரட்டும்...
எங்கோ ஒரு சில்வண்டுமட்டும்
நிசபத்தத்தில் துளையிட்டுக்கொண்டிருந்தது...
காற்றுக்கும் மரங்களுக்குமாய்
ஏதோ ரகசியம் பேசப்பட்டுக்கொண்டிருந்தது...
ரகசியம் ஏன்...
நீங்கள் சத்தமிட்டே பேசுங்கள்
நாங்கள் மனிதப்பிறப்புக்கள்...
எங்களிற்கு உங்களின் மொழி புரியாது...
குருவிகளெல்லாம் தூங்கிவிட்டிருக்கும்
நாளையின் ஆச்சரியங்களுக்காய்
அவை அலட்டுவதில்லை....
வால்வெள்ளியொன்று
தூரத்தே நீண்டுமறைந்தது...
வால்வெள்ளிகண்டால்
பூவொன்றை நினைத்துக்கொள்...

பாட்டி சிறு வயதில் சொன்னாள்...
இப்போது சிலாகித்துக்கொண்டேன்...
சுவாரசிய கதைகள் எல்லாம்
அவளுடனேயே விலகிப்போனது...
இப்படியே... இந்நொடியே....
இருட்டினுள் கரைந்துபோனால் என்ன...
நாளை மீண்டும்.
கடிகாரத்தினுள்
தொலைந்துபோகவேண்டியிருக்காது..
இந்த இரவு எத்தனை பேரால்
இரசிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்...
எத்தனை இரவுகள் இதுபோல் என்னால்
இரசிக்கப்படாமலேயே
தொலைக்கப்பட்டிருக்கும்...

அம்மா அழைக்கிறாள்....
மகன்..
வெளியில பனி விழுது.. உள்ள வா..
நாளைக்கு வேலைக்கும் போகவேணும்...
சுருட்டப்பட்ட இரவுடன்
நாளைக்காய் உறங்கப்போகிறேன்..
மீண்டும் ஓர் மின்சாரமில்லா இரவுவரை
என் இரவுகள் ஒத்திவைக்கப்படுகின்றது....!!!



**கலைநாதன் ஜெயகணேஷ்**
**இல:10**
**கோவிந்தன் வீதி**
**திருக்கடலூர்**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத பிரபலம்

## கவிஞர் "மூனாக்கானா"

இவரின் முழுப்பெயர் முருகப்பன் கணபதிப்பிள்ளை. 'மூனாக்கானா' எனும் புனைபெயரில் எழுதும் இவர் 1924.01.22 ல் மட்/ஆரையம்பதியில் முருகப்பன் தங்கம்மா தம்பதியினருக்கு மகனாகப்பிறந்தார். 02.05.1954 ல் சின்னப்பிள்ளை இவரின் துணைவியானார். நூற்றுக்கணக்கான தலைப்புகளில் தனது கவித்திறமைகளை வெளிப்படுத்தியுள்ள இவர் கவிதையியல் மட்டுமல்லாது ஆய்வுக்கட்டுரைகள்,கூத்து,நாடகம்,வில்லுப்பாட்டு, கிராமிய நடனங்கள் இவற்றிலும், வைத்தியம்,சோதிடம்,மந்திரம் போன்ற கலைகளிலும் சிறிது ஈடுபாடு கொண்டுள்ளார்.

**பெற்ற விருதுகள்**

கலைமணி ~ மட்டக்களப்பு கலாசாரப் பேரவை 1987.09.12
கலாபூஷணம் ~ இந்து கலாசார அமைச்சு 1995.05.22
மக்கள் கவிமணி ~ ஆசிரிய கலாசாலை பொன்விழா 1996.11.20
கலையரசு ~ மட்/கல்வித்திணைக்களப் பண்பாட்டுப் பிரிவு 2000.01.14
தலைக்கோல்விருது ~ கிழக்குப் பல்கலைக் கழகம் 2001.03.30

**தான் எழுதியதில் தனக்குப்பிடித்த கவிதையாக இதைத் தருகிறார் கவிஞனுக்கு...**

## கடவுளும் நானும்

மண்ணிலே தான் பிறந்த மனிதர் படுந் துயரம்
எண்ணியே நான் வருந்தி இதற்கென்ன காரணமோ
என்று நினைத்து இறைவனிடம் கேப்பமென்று
சென்றேன் திருலோகம் தெய்வத்தைக் கண்டுவிட்டேன்.
ஆழ்ந்த அமைதியுடன் ஆண்டவனார் வீற்றிருந்தார்.
ஆண்டவனே! என் மனதில் ஐயமொன்று உள்ளதென்று
காண்டீபம் போல்வளைந்து கையெடுத்துக் கும்பிட்டேன்.
விண்ணில் இருந்து எங்கள் வேதனையைப் பார்ப்பதற்கோ
மண்ணில் எமைப்படைத்தாய் மனிதர் படும் துயரம்
என்னவென்று சொல்லி எடுத்துரைப்பேன் உங்களிடம்
சொன்னால் கண்ணீர் சொரியும் தூயவரே உங்களுக்கும்
அன்னையில்லாப் பிள்ளைகள் போல் அழுது தவிக்கின்றோம்
பஞ்சம் பசிகளவு பட்டினியும் பொய் கொலையும்
மிஞ்சும் பல நோய்கள் வேதனைகள் சோதனைகள்
சூறாவளி வெள்ளம் சுனாமியொடு மண்சரிவு
ஆறாத வெப்பம் அனர்த்தம் நிலநடுக்கம்
உயிரிழப்போ பல லெட்சம் உடமைகளோ பல கோடி
மயிரிழையில் நான் தப்பி வந்து இங்கே நிற்கின்றேன்
எம்மை இந்தத் துன்பங்கள் ஏன் வருத்துகின்றதென்று
இந்த மடையனிடம் இயம்புமென்று கேட்டு நின்றேன்.
என்னிலையைக் கண்ட இறைவன் மனமிரங்கி
புன்முறுவல் பூத்து புனிதவாய் தான் திறந்து
மானிடனே! நானுமுன்னை மறு உயிர்க்கும் மேலாக
ஆறாம் அறிவு தந்து அவனியிலே நான் படைத்தேன்
நியதி பல வைத்தேன் நீயுணர்ந்து முன்னேற
அமைதியைக் காத்திடுதல் அடியேனின் வேலையல்ல

தொடர்ச்சி பக்கம் 9 ல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணக் கவிஞன்

ஒரு கவிஞன் தன் மொழிவளம் பெருக்கிக்கொள்வது அவனது கவிதைகளின் விலாசத்தை விசாலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான பவநந்தி முனிவர் இயற்றிய "நன்னூல்" விளக்கவுரையுடன் இவ் இலக்கணக் கவிஞன் பகுதியினூடாக வாசகர்களுக்காக தரப்படுகின்றது.

குறிப்பு:~ இலக்கணப்பகுதி மாத்திரம் தரப்படுகின்றது

## நன்னூல்

எண்

1. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
   எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

மொழிக்கு முதற்காரணமும் , அணுத்திரளின் காரியமுமாகிய ஒலியே எழுத்து எனப்படும். இது முதலெழுத்து சார்பெழுத்து என இருவகைப்படும்.

2. உயிரு முடம்புமா முப்பது முதலே.

உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களுமே முதலெழுத்து எனப்படும்.

3. உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
   பஃகிய இஉ ஐஔ மஃகான்
   தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகிய பத்து எழுத்துக்களுமே சார்பெழுத்துக்களாகும்.

(தொடரும்...)

அறிந்துகொள்வோம்......

"ஒள" - என்பது "ஔ" என எழுதப்படல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுயிரே பிரியாதே!

நானே நீயாகி
நீயோ நானாகி போன பின்னும்
எனக்கில்லா மதிப்பு
உனக்கு அதிகம்தான்!

என் வார்த்தைகள்
உணர்த்தா உண்மைகள்
உன் மௌனத்தால்
எவ்வாறு உணர்த்துகிறாய்?

அன்பே!
நீயின்றி என் வாழ்வில்லை
என்பதுனக்குத் தெரியாதா?

மறந்தும் நீ
எனைப்பிரிந்தால்
என்செய்வேன் நான்
இவ்வுலகில்..

என் உறவுக்கு உறவாகி
உயிருக்கு காவலாகி
உடனிருக்கும்
அடையாள அட்டையே நீ
பிரியாதே என்னை விட்டு.




தர்ஷியா
3 ம் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6ம் பக்கத் தொடர்ச்சி.....

என்றும் அமைதியுடன் இவ்வுலகில் நீவாழ
உன்னைப் படைத்துள்ளே உள்ளமொன்றை நான் வைத்தேன்
வைத்த அந்த உள்ளத்தின் மகிமை தன்னைப் போதிக்க
புத்தரொடு யேசு நபி போன்ற எந்தன் தூதர்களை
சித்தர்களை முத்தர்களை இருடிகளை முனிவர்களை
எத்தனையோ ஞானிகளை அங்கே அனுப்பி வைத்தேன்
அங்கே அனுப்பிவைத்த அவர் வழியை நாடாமல்
எங்கோ அலைகின்றீர் இதுஎந்தன் குற்றமல்ல
அஹிம்சை தனையறிய அனுப்பினேன் காந்தி தன்னை
வன்பறிந்து நீவிலக வல்லரக்கர் நான் படைத்தேன்
கள்ளமில்லா உள்ளத்தை கைக்குழந்தை காட்டவைத்தேன்
என்னுக்குள் எண்ணெய் வைத்தேன் என்னை உணர்ந்துகொள்ள
நாநிலங்கள் காற்றுமழை நல்லாறு கடல் மலைகள்
சோலை வனங்களுடன் தூயநீர்ப் பொய்கை வைத்தேன்
இவைகளை நீ நஞ்சாக்கி இயல்பு நிலை மாற வைத்தாய்
எவையெல்லாம் தீமைகளோ அதன் வழியே நீ நடந்தாய்
சூரியனைச் சந்திரனைச் சுழலவிட்டேன் உனக்காக
உண்மையே வெல்லுமென்று உலகறியக் காட்டுதற்கு
மன்னன் அரிச்சந்திரனை வாய்மைக்கு நான் படைத்தேன்
கூடியே உண்பதற்கு குவலயத்தில் காகமுடன்
சோடி உறவுக்கு தூய அன்றில் நான் படைத்தேன்
நல்லதையே பிரித்தேடுக்க நான் அன்னம் படைத்திருந்தும்
கெட்டதையே தேர்ந்தெடுத்துக் கெடுவதும் நீதானே
பேதை மனந்தெளிய பெரியதர்ம சாத்திரங்கள்
கீதை குறளுனக்கு கிடைக்க வைத்தேன் மானிடனே
வருதுமே மேடு பள்ளம் வாழ்க்கையிலே என்றறிய
இரவு பகல் மாறவைத்தேன் இதை நீ உணர்ந்தாயா?
பிறந்த பொழுதிலும் சா பின்னூறு ஆண்டிலும் சா
இறப்பும் பிறப்பும் என் பொறுப்பு ஆதலினால்
பிஞ்சும் உதிரும் பெருங்கனியும் தானுதிரும்
அஞ்சாமல் நீ வாழ ஆன இடைக் காலமுண்டு
இந்த இடைக் காலத்தில் இவையுணர்ந்து வாழாமல்
என்னை மறந்து என்படைப்பின் தத்துவங்கள்
தன்னை மறந்து தலைகீழாய் நீநடந்து
நொந்து அழுது வந்தால் இதற்கு நான் என்ன செய்வேன்
அடிப்பதுவும் நீங்கள்தான் அழுவதுவும் நீங்கள்தான்
தடுக்கி வழிநடந்து தவிப்பதனால் என்ன பயன்
உண்மையை நீ உணர்ந்து ஒழுங்காய் நடந்து வந்தால்
என்னை நீ தேடி இங்குவரத் தேவையில்லை
ஆதலினால் மானிடனே! அயர்ந்து நீ போகாதே
உன்னுடைய உள்ளத்தின் உள்ளே நீ சிந்தித்தால்
என்படைப்பின் நோக்கமெல்லாம் எளிதில் புரிந்துவிடும்
சென்று வா என் மகனே! திருந்தி நீ வாழ்ந்திடுக!
என்று சொல்லி என் தெய்வம் எனக்கு விடை தந்ததுவே.

'மூனாக்கானா'



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதல் மௌனம்

போவதாய் நானும்,
வருவதாய் நீயும்,
எத்தனை தடவைதான்
சந்தித்துக்கொள்வது
ஒரே வீதியில்.

விழிகள் மட்டும்
வினாவிக்கொள்கின்றன

உச்சரிக்கும் வார்த்தைகள்
உரம் பெறாமலே
உலர்ந்து விடுகின்றன

உதடுகளில் வார்த்தைகள்
இடறுப்படுகின்றன.

நாளை பேசிவிடுவோம்
என்ற
நம்பிக்கையில் தானோ
இரவுகளும் விடிந்துவிடுகின்றன.

நாளை நாளை என்றே
நாட்கள் கடந்து விடுகின்றன
பேசிக்கொள்ள
நீயும் நானும்
நிறைய வைத்திருந்தும்!



சுகிர்தராஜன்
87/ 100வீட்டுத்திட்டம்
பெரியகமம்
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படக் கவிதை

இதன் மூலம் வாசகர்களிடமிருந்து அட்டைப்படத்தினைப் பிரதிபலிக்கும் சிறிய கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவை இப்பக்கத்தில் பிரசுரிக்கப்படுவதோடு வாசகர்களே அட்டைப்படங்களுக்குப் பொருத்தமான படங்களையும் வரைந்தனுப்ப முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.


## இம்மாத அட்டைப்படக் குட்டிக் கவிதை

## இணைத்து இணைவோம்..

நீயும்.. நானும்... ஒன்றல்ல...
இருந்தும் உனக்கும் எனக்குமாய்
அழகிய பொருத்தங்கள் ஏராளம் உண்டு...
இதோ எடுத்துக்கொள்வோம்
என்னிடம் நீயும் உன்னிடம் நானும்...
நட்பின் சிதறல்களை...!
பொருந்தும்போது தெரியும்
நம் நட்பின் இறுக்கமும்
அழகாய் அதன் உருவும்....உண்மையாய் ...!!!

***கலைநாதன் ஜெயகணேஷ்***

---



அடுத்த மாதம் அட்டைப்படமாகவுள்ள இப் படத்தைப் பிரதிபலிக்கும் உங்கள் எண்ணங்களை கவிதையாக்கி எமக்கு எழுதியனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களையும் பெயரிடுங்கள்



எங்களையும் பெயரிடுங்கள்
நாங்களும் மனிதர்கள்தான்
புதிதாய் ஒரு வகையீடு
எங்களுக்கு என்னத்திற்கு

கந்துடைந்த மரமென்றால்
வேறு காடு தேடுவதோ?
விழுது விழுந்துவிட்டால்~ ஆலை
அரசை ஆகிடுமா?

எங்களுக்கு மட்டும்ஏனோ
ஊனரென்றீர்
அடுத்தடுத்து
அங்க வீனரென்றீர்
இப்போது வேறாய்
மாற்றுத் திறனுடைய
மனிதர்கள் நீங்களென்றீர்
நாளை ஞாலமிடும்
பெயரென்ன நாமறியோம்

எங்களையும் பெயரிடுங்கள்
நாங்களும் மனிதர்கள்தான்

கண்ணென்ற உருவம்
கலைந்துமே போகவில்லை
அன்பாய்ப் பார்க்கவும்
எங்களுக்கும் முடிகிறது

ஒளியென்ற ஒன்றே
எங்கள் விழி செல்ல
வழியின்றி விழிக்கிறது ~இது
ஒளியின் இயலாமையாய்
இருக்கவும் முடியுமன்றோ?
இருந்தும்..
தங்களின் வகையீட்டில்
நாங்கள்தான் அங்கதர்கள்

எங்களையும் பெயரிடுங்கள்
நாங்களும் மனிதர்கள்தான்.

– கவிஞன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேசைக் கிறுக்கள்



இப்பகுதி ஒரு வித்தியாசமானதாக அமையலாம். இதற்காக நாங்கள் கவிஞர்கள் உருவாக்கப்படும் ஆரம்ப இடமாகிய வகுப்பறை மேசைகளை நாடவேண்டியிருந்தது. அங்கு பெற்றுக்கொண்ட சில கிறுக்கல்களே இவை. சில மிகவும் உணர்புபூர்வமானவை. முகம்தெரியா கவிஞர்களின் சில முத்துச் செதுக்கல்கள் சில..........

முதல் ஆமிக்குப் பயம்
பின் சு னாமிக்குப் பயம்
இப்போ மாமிக்குப் பயம்

ஒரு நிமிடத்தில்
உங்களை நினைப்பவர்கள்
ஒரு சிலர்தான்-அதே
ஒரு நிமிடத்தில்
உங்களை
பல தடவை நினைப்பவள்
நானொருத்தி மாத்திரந்தான்

உன் நிழலையேனும்
தொட முனைகிறேன்
ஆனால்
நீ நிலவாகையால்
உன் நிழல்கூட
நிலத்தில் விழுவதில்லையே
நான் என்ன செய்வேன்!

வாழ்க்கை,
ஏற்றப்பட்ட மெழுகுதிரி போன்றது
முற்றாக உருகும் என்றல்ல
மாறாக,
எவரும் நினையாத நேரத்தில்
அணையக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைமகள்



1.தோற்றுவாய்

-வேதமூர்த்தி-

வித்தக நாயகன்
வேண்டுதலோடே
முத்தமிழொன்று
முளைத்துத் தழைத்து
காவியமாக கரை புரண்டது
காவலன் இளங்கோ
பாவலனானான்
பரிணமித்தது பார்புகள் முத்தமிழ்.

ஆகா ஓகோ! ஆகாகா!
ஆற்புதமென்னே!
ஆங்கே
உயர் கோவலன் கண்ணகி
கூடிய வாழ்க்கையில்
கோலத்தனத்தள் மாதவி என்ற
மங்கை இடையில்
மாட்டிய வேளையில்
மயங்கிய கோவலன்
மண்ணையிழந்தான்~உயர்
பொன்னையிழந்தான்~நற்
பெண்ணையிழந்தான்~முழுப்
பண்ணையிழந்தான்~உயிர்
தன்னையிழந்தான்.

இந்த
மாண்புறு ஓவியம்
மறுகால் ஓர்தரம்
இன்றே
மண்ணுக்குள் வித்தாகி மலர்கிறதே.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகனிடமிருந்து கவிஞனுக்கு

உங்கள் விமர்சனங்கள், கருத்துக்கள் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு கலைஞனுக்கு விமர்சனங்கள் மிக முக்கியமான தூண்டுகோலாக அமைவதுடன் அவனைப் புடமிடுவதும் உங்களிடமிருந்து வரும் விமர்சனங்களே. இன்றைய இதழில் இப்பகுதியிலும் ஒரு கவிஞனின் கிறுக்கல் இடம்பெறுகின்றது.

~நன்றி~

என் கண்களை மட்டுமல்ல
என் இதயத்தையும்
திருடிவிட்டவள் நீ!
அதனால்த்தான் ~ இன்று
உன்னைத்தவிர
எதையும் தெரியவில்லை எனக்கு

இப்போது
இரவுகள் நீளமாகிறது எனக்கு
உன் நினைவுகளால்...

மனதை மட்டுமல்ல ~ என்
தூக்கத்தையும்
பறித்துச் சென்றுவிட்டாய்!

வார்த்தைகளால் வாழவைத்த நீ
இன்று
உன் மௌனத்தால்
தினம் தினம் எனை
மரிக்கவைக்கிறாய்...
காரிகையே நின்
காரணம் புரியவில்லை
எனக்கு!

வாழ்ந்தும் தினமும் இறக்கிறேன்
உன்மேல்
பாசம் வைத்த காரணத்தால்

சொல்லிப் புரிவதில்லை காதல்
சொன்னாலும்
புரியவில்லை உனக்கு!



செ. சி. செந்தூரன்
27/69 பூந்தோட்டம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kavignan கவி ஞன்

**மாதாந்தம் தொடர்ந்து நீங்களும் கவிஞன் சஞ்சிகையினைப் பெற மற்றும் மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 071 53 73 468**

**தங்களின் கவிதை நூல்கள் அனுப்பிவைக்கப்படுமிடத்து அவை கவிஞன் ஊடாக அறிமுகப்படுத்தப்படும்**

முதல் கவிஞன் வெளிவர அனைத்து வழிகளிலும் உதவிய நண்பர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்




**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**
ஆசிரியர்,
"கவிஞன்" சஞ்சிகை,
கூட்டுறவுக் கடை வீதி,
புதுக்குடியிருப்பு - 5 (E.P),
மட்டக்களப்பு, இலங்கை.

**மின்னஞ்சல்:**
kavignan@live.com


அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org